உ

சிவமயம்



கரவெட்டி கிழக்கு

# திரு. செல்லையா வல்லிபுரம்

ஒய்வுநிலை ஆசிரியர் B.A (J.P)

சமாதான நீதவான்

அவர்களின் இறைபதப்பேறு குறித்த

# நினைவுச் சுடர்

**30.08.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புடனும் பண்புடனும்
அகிலத்தே வாழ்ந்து
அன்புச் சுடராய்
அகத்தில் ஜொலித்த
அணையாத தீபம்
அணைந்து விட்டாலும்
அகத்தில் இருந்தே
அணைந்து விடாது
அகவுள்ளத்துள் என்றும்
அணையாது ஒளிறும்
அன்புச் சுடர்க்கு
அருஞ் சமர்ப்பணம்

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



மலர்வு
16.06.1932

உதிர்வு
14.08.2015

அமரர்

# திரு. செல்லையா வல்லிபுரம்

(ஓய்வு நிலை ஆசிரியர், சமாதான நீதவான் J.P)


**திதி நிர்ணயம்**

ஆண்டு மன்மத ஆடி அமவாசை திதி
பூண்டவெள்ளி இருபத்து ஒன்பதிலே - நீண்டபுகழ்
புவி நீத்து வல்லிபுரம் பொற்கயிலை நாடிச்
சிவி யூர்ந்து சென்ற தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண பதிவு நடைபெற்றபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதவானாகப் பதவிப்பிரமாணம் செய்தபோது











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி பாபாவின் தேன் துளிகள்

உனக்கு மனோநிலை சரியில்லாத போது அல்லது கோபத்துடன் இருக்கும்போது, மௌனமாக இருக்க வேண்டும். சொற்களைப் பரிமாறி கோபத்தை அதிகப்படுத்தலாகாது.

(ப- 158)

உனது இதயத்தைத் தூய்மைப்படுத்தினால், உனது பிரதிபலிப்பைக் கண்ணாடியில் காண்பது போல், இறைவனது பிரதிபலிப்பை உன் இதயத்தில் காணலாம்.

(ப- 159)

தெய்வீக அன்பு ஆண்டுகள் கடந்தாலும், பிறவிகள் கடந்தாலும், யுகங்கள் கடந்தாலும், மாறாமல் அழியாமல் இருக்கிறது. இது நிரந்தர அன்பு - மதுரமான அன்பு.

(ப- 181)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் வயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தினமொரு பஞ்சபுராணம்

## ஞாயிற்றுக்கிழமை

### தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்க முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருள(ல்) வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திங்கட்கிழமை

## தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

தோடுடைய செவியன் விடையேறி யோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்
எடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவப்புரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன்ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரியாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றது ஆர் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை
மணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுணைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
சென்பரங் குன்றிற் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செவ்வாய்க்கிழமை

## தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந்தேரு
நெறியலாதனபுறங்கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசின ரொருபால்
மெல்லிய லொடுமுடனாகித்
துன்று மொண் பவ்வமவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்று மொண்கானல் வாசம் வந்துலவுங்
கோணமாமலை அமர்ந்தாரே

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவேன்

## திருவிசைப்பா

உருக்கி என் உள்ளத்துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப்(பு) அருளும் தில்லைச்
செல்வன் பாற் செல்லும் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணாக் கண்வாய்
பேசா(து) அப்பேய்க ளோடே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்துவம்பின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க(ப்)
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்மந்தர்
பாதமலர் தலைகொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

அகரமுமாகி யகிபனுமாகி யதிகமுமாகி ஆகமாகி
அயனென்வாகிஅரியெனவாகி அரனெனவாகி அமர்மேலாய்
இகரமுமாகி யெவைகளு மாகி யினிமையுமாகி வருவோனே
இருநில மீதி(ல்) எளியனும் வாழ எனது முனோடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்களிகூரும் வடிவோனே
வனமுறை வேடனருளிய பூசை மகிழ்கதிர்காம முடையோனே
செககண சேகு தகுதிமி சோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலிவானபழமுதிர்சோலை மலைமிசைமேவு(ம்) பெருமாளே

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதன்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி
போதொடு நீர் சுமந்தேத்தி(ப்) புகுவாரவர் பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடுங்களிறுவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்கண்டறியாதன கண்டேன்.

## திருவாசகம்

சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

## திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன் புருவம் ஆனார்

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நினைந்திட் டுணர்வாலே
பரவுதெரி சனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாழக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டர் நாம் வணங்கும் கடவுளாரே.

## திருவாசகம்

தோலுந் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பீ

## திருவிசைப்பா

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன் மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்(து) இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய
தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டம் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின் கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளிக்கிழமை

## தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்க்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூருளானே

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையினாற்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே.

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்போடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழலொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபோரறிவும் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையேயாகக் குணமொருமூன்றுந்
திருந்துசாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக்ளிளையோனே கதிர்காமப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனிக்கிழமை

## தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ் வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை(ப்)
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்

## திருவிசைப்பா

பாடலங் காரப் பாசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்டசுரு திருப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஆயிலொத் தொழுமிரு விழியாலே
அமுதொத் திடுமரு மொழியாலே
சயிலத் தெழுதுணை முலையாலே
தடையுற் றடியனு மடிவேனோ
கயிலைப் பதியரன் முருகோனே
கடலக்கரை திரை யருகேசூழ்
மயிலைப் பதிதனில் உறைவோனே
மகிமைக் கடியவர் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்க வாசக சுவாமிகளினால் தில்லையில் அருளிச் செய்யப்பட்ட

# திருப்பொற் சுண்ணம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சக்தியும் சோதியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ணமிடித்துநாமே

பூவியல் வார்சடை யெம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதனல் வேலன் தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணிமின்க ளுலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணபற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருகலமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்கு
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலவோச்சு வார்பெரிய
	ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
	காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
	நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
	மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
	தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
	நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
	பங்கின னெங்கள் பராபரனுக்கு
காடக மாமலை யன்னகோவுக்
	காடப் பொற்சுண்ண மிடித்துநாமே

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
	வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
	சோற்றெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
	நாயிற் கடைப்பட்ட நம்மையின்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
	யாடப் பொற்சுண்ண மிடித்துநாமே

வையக மெல்லா முரலதாக
	மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறையஅட்டி
	மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
	செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
	ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க மாற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கையிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே

ஞானக் கரும்பின் டெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணமிடித்துநாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய் சுண்ண மிடித்துநாமே

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்றலை கொண்டுசெண் டால்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் **செ.வல்லிபுரம்** அவர்களின்

# வாழ்வியல் சுவடுகள்.....

ஈழமணி திருநாட்டின் தலையென அமைந்த யாழ்ப்பாண நன்நகராம் நற்றமிழ் நாட்டின் வடமராட்சிப் பகுதியின் கரவெட்டி கிழக்கில் செங்குந்தர் முதலியார் வம்சத்தில் தாமர் வல்லிபுரம் மகனான திரு. செல்லையா அவர்களும், திரு. இராமு என்பாரின் மகள் சிவகாமியும் இனிதே இல்லறம் என்னும் நல்லறத்தினை நிகழ்த்திய காலை அவர்கள் குலம் தழைக்க வந்துதித்த நற்புத்திரர்கள் இருவரில் இளையவர் திரு. வல்லிபுரம் ஆசிரியர் ஆவார்.

இவர்கள் குலதெய்வமான யார்க்கரு விநாயகரின் அருளால் *16.06.1932* இந்த மண்ணில் அவதரித்து,

"நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்
ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக
இருக்க வேண்டும்"

டாக்டர் அப்துல்கலாமின் வார்த்தைகளுக்கு அமைய, செல்வங்களில் சிறந்த செல்வமாகிய கல்விச் செல்வத்தையும், சிறந்த தானமாகிய வித்தியா தானத்தையும் திறம்பட "கற்றல் - கற்பித்தல்" என தன் இறுதி மூச்சு வரை நடைமுறைப்படுத்தியவர். இவர் வாழ்வும் எம்மவர் மத்தியில் ஒரு சரித்திரம் தான்.

திரு. செ.வல்லிபுரம் அவர்களின் குடும்ப பின்னணியில் சமூகத்தில் மேம்பட்ட நிலையில் உள்ளவராக காணப்பட்டார்கள் இவரது தந்தையாரான அமரர் செல்லையா முதலியார் அவர்கள் ஸ்ரீ யார்க்கரு விநாயகராலய மானேஜராகவும், மதவாச்சியை சார்ந்த இடங்களில் பிரபல வியாபாரியாகவும் திகழ்ந்தவர்.

புலோலி தெற்கை சேர்ந்தவரும் புகழ் பூத்த புலவருமாகிய கந்தமுருகேசனாருக்கிடையில் நெருங்கிய நட்புறவு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரணத்துக் கார்த்திகையிற் சார்வெள்ளி பிற்பக்க
ஏரணவு மெட்டாநாள் எண்ணுதினம் - சீரணவு
முத்தரநாட் செல்லையா வோங்கி வளர்கயிலை
உத்தமன்றாள் சேர்ந்தா னுவந்து.

துந்துபி முழங்க வானோர் தோகையர் நடன மாட
அந்தரு மலர்கள் தூவி யார்சிவ கணங்களாட
கந்தரு வத்தர் பாடக் கஞ்சுக வாற தோடச்
சுந்தர மீன வன்றாள் துன்னினான் செல்லையாவே.

கல்வெட்டில் பாடிய இப்பாடல்கள் இரண்டும் அதற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது. "இராம இலக்குவணர் ......" காவியமான இராமாயணத்தில் மட்டுமல்ல இவரின் நிஜ வாழ்விலும் சகோதரர் அமரர் திரு. செல்லையா இரத்தினசபாபதி அவர்களுக்கு அன்பினால் அடிமையாகி அவருக்கு நிழலாக தொடர்ந்தவர். அவர் கோடு கீறினால் அதை தாண்டாத அளவிற்கு தனது அன்பு அண்ணன் மீது மரியாதையும், பக்தியும் கொண்டவராக காணப்பட்டார்.

வாழ்க்கை என்னும் தொடர்கதையில் மனைவி என்னும் பாத்திரம் இடையினில் இணைக்கின்ற முக்கிய கதாப்பாத்திரம் வாலிபத்தின் வசந்தத்தில் இணையாக பறப்பதற்கு பெற்றவர்களினதும், உற்றவர்களினதும் தேடலில் கிடைத்த ஆழ்கடலின் ஆணிமுத்து பிரேமசியாமளா எனும் அழகிய யுவதி.

இவர் 'பிறேம' என்னும் பதத்திற்கு அமைய தனது கணவர் மீது பக்தியும் அன்பும் கொண்டவர். இவர் மந்திகை கண்ணகி அம்மன் கோவில் பூசகர் பரம்பரையில் வழிவந்தவர். குரும்பைகட்டி சிவசம்பு பொன்னுத்தரை புவனேஸ்வரி தம்பதியினரின் மூத்தமகளாகிய இவர் 1977ம் ஆண்டு மே மாதம் 01ம் திகதி தன் மணவாழ்க்கையை அமரர் வல்லிபுரம் அவர்களுடன் இனிதாக ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் வல்லிபுரம் அவர்கள் தனது மனைவியாகிய சியாமளாவின் சகோதரர்களுடன் அன்புடனே நடந்து கொண்டார். பிரேமநிர்மலா, பிரேமகாந்தா, கௌரிமோகன், கருணேந்திரலதா, லீலாரமணி, சுவர்ணாம்பிகை, என்போர் மைத்துனர்களாக அமைந்தார்கள்.

தாய்வழி சகோதரர்களாக நாகலிங்கம், குமாரசாமி. வைத்திலிங்கம், மார்க்கண்டு, நடராசா, சிதம்பரப்பிள்ளை, சின்னத்தம்பி, சிவத்தனம்(சுபத்திரை) விளங்கினர். தாய்வழி மைத்துனர்களாக அருணாசலம் விளங்கினார், தாய் தந்தை வழிச் சகோதரர்கள் சுப்பிரமணியம், மங்களநாயகி, நல்லநாயகி அமைந்தனர்.

தகப்பன் வழி மைத்துனர்களாக சிவராமலிங்கம், சிவபாதசுந்தரம், சோமஸ்கந்தசிவம், சிரேட்டராசா, மங்கையர்கரசி, ஆறுமுகம், சிவநேசம், சந்திரசேகரம், புனிதவதி, மாணிக்கவாசகர் அமைந்தனர்.

அமரர் அவர்கள் பெற்றவர்களுக்கு நற்புத்திரனாய், சகோதரன்மீது பாஷமுள்ளவராய் மனைவிக்கு நல்ல துணைவராய், உறவினர்கள்மீது அன்புள்ளவராய் மட்டுமன்றி கடவுள் மீதும் பக்தி கொண்டவராகவே காணப்பட்டார். சாயிசேவையில் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர். சிறந்த சாயி பக்தர். இந்திய தலயாத்திரை சென்று இறை தரிசனம் பெற்றவர். சாயிபாபாவின் நேரடித்தரிசனம் கிடைக்கப் பெற்றவர்.

ஆலயத்தின் புராணப்படிப்பு, சிவத்தொண்டுகள் செய்தவர். பருத்தித்துறை சிவன்கோவில் பசுபதீஸ்வரர் மீது அளவில்லா அன்பு கொண்டவர். கொடியேற்ற திருவழாக்களின் போது தவறாது கலந்து கொள்பவர். தனக்கு சிவனின் தரிசனம் நேரில் கிடைக்கப் போகின்றது என்பதை அறியாத இவர் ஒரு சில வாரங்களுக்கு முன் தனது உறவினராகிய திரு. பாலசுப்பிரமணியத்தை அழைத்து “பாலு பருத்தித்துறை சிவனுக்கு பூசை கட்டி வா” என்று பணத்தினை கொடுத்து அனுப்பியவர் அந்த பிரசாதத்தை வேண்டியதில் திருப்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பார். ஆனாலும், அவர் வல்லிபுர ஆழ்வாருக்கு பொங்கல் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அதற்குள் காலன் அவரை கைப்பற்றி சென்றுவிட்டான்.

அமரர் தனது உறவுவழி பேரப்பிள்ளைகள் அனைவரிடமும் அன்புடன் நடந்து கொண்டார். அவர்கள் மீது அக்கறையும் உரிமையும் பாராட்டினார். அவர்களிடம் சிறுவயதில் ஆங்கில அறிவை புகட்டுவதற்கு அரும்பாடுபடடவர். தனது பேரப்பிள்ளைகளின் பட்டமளிப்பு விழாக்களில் கலந்து கொண்ட போது பெருமிதம் கொண்டவர். தனது பேரன் ஜெயமாருதி மருத்துவ பீடத்திற்கு தெரிவான போது அளவற்ற அன்பும் பூரிப்பும் கொண்டவர். தனது பேரப் பிள்ளைகளுக்கு சிறிதாகவோ பெரிதாகவோ பணமாகவொ, பொருளாகவோ பரிசில்கள் கொடுக்க தவறாதவர்.

**கல்வியும் சேவையும்**

வாழக்கையெனும் புத்தகத்தின் பக்கங்களை புரட்டுகின்ற போது ஒரு மனிதனின் வாழ்ந்த வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாக திகழ்வது அவன் "கற்ற கல்வியும் ஆற்றிய சேவையும் தான்"!

அந்தவகையில், அமரர் திரு. வல்லிபுரம் அவர்கள் தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கு அமைவானவர் தான்.

இவர் ஆரம்ப கல்வியை கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், இடைநிலை கல்வியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் இந்திய சர்வகலாசாலையில் தன்னுடைய மேற்படிப்பை தொடர்ந்து **B.A** பட்டத்தினை பெற்றுக்கொண்டார்.

ஆசிரிய சேவையில் இணைந்து வாழ்வின் இலட்சியம் "கற்பித்தலே" என்பதை இலக்காக கொண்டவர். மதவாச்சி, ஹஹாட்ட ஹஷ்கிரிய கல்லூரியில் இருந்தே தனது ஆசிரியசேவையை ஆரம்பித்தார். அடுத்து, கொழும்பு வவேகானந்தா கல்லூரியில் நீண்ட காலம் தனது சேவையினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, கொண்டிருந்த வேளையில் தனது அன்பு சகோதரனின் சுகவீனம் காரணமாக சேவைகாலம் முடியும் முன்னரே தனது 'ஓய்வூதியக்' கடிதத்தை சமர்ப்பித்துவிட்டு கொழும்பிலிருந்து கரவெட்டிக்கு வந்து தனது சகோதரரை கவனித்துக் கொண்டார். அந்த காலப்பகுதியில் "ஞானசாரியார் கல்லூரியில் பகுதிநேர ஆசிரியராக சேவையில் ஈடுபட்டு வந்தார்.

இவர் கலைத்துறையில் மிகவும் ஈடுபாடுடையவராக காணப்பட்டார். "வா. சேனா" என்ற புனை பெயரில் பல கவிதைகள் எழுதியுள்ளார். கோவில்கள் மீது பல பாடல்கள் இயற்றியுள்ளார். நல்ல வாசகராகவும், நல்ல ரசிகராகவும் காணப்பட்டதோடு இசைத்துறையில் சிறந்த விற்பன்னராகவும் காணப்பட்டார். ஆர்மோனியம் வாசிப்பதில் விற்பன்ராக திகழ்ந்தார்.

அமரரின் பல கவிதைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் வெளிவந்த போது புத்தகமாக வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் சாதகமாக அமையவில்லை. எனவே அந்த குறையை தீர்ப்பதற்காகவும் மனத்திருப்பதிக்காகவும் ஓரிரு பாடல்கள்

**தினமுரசில் 17.08.2008ம் ஆண்டு வெளிவந்த கவிதை**

நல்லூர் முருகன் ஆலய திருவழா
ஆரம்பிப்பதை முன்னிட்டு பாடியது

இராகம் - பிலஹரி தாளம் - ஆதி

பல்லவி

நல்லூரான் இருக்க நமன்பயம் வருமா
சொல்லுவீர் முருகா சுகம்பல தருமே

அநுபல்லவி

வல்லவன் கந்தவேள் வழுந்துவீர் தினமே
நல்லவன் குகனே நினைத்திடு மனமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

பக்தர்கள் காவடி பவனியில் வருமே
வித்தகர்கள் பஜனை விடிவைத் தருமே
முத்தர்கள் யோகம் முழுமதி நிலையே
நித்தமும் நினைப்பின நித்திய வாழ்வே!

அமரர் அவர்கள் இறுதியாக சந்நிதியான் முருகனை வழிபடச் சென்ற போது "ஞானச்சுடர்" க்கு இறுதியாக எழுதி அளித்த கவிதை.

**காப்பாயே கந்தா**

ஆற்றங்கரை பூவரசில் அமர்ந்தருளும் பெருமாளே
நாற்றம் நிறை மலர்மாலை நயந்து நாளும் அணிபவனே
சீற்றம் கொண்ட சூரனையே அழித்து ஆட்கொண்டவனே
ஏற்றம் காண ஏழைகளை ஏறெடுத்தும் பார்க்காயோ
மாற்றம் காண மக்கள் தினம் மன்றாடி தொழுகின்றார்
தேற்றம் தந்து தினம் வாடும் திசை தெரியா நம்மவரை
கூற்றம் வருமுன்னே கூட்டிவாழ குதித்து வாராய்
காற்றும் எம்மை அரவணைக்கும் கருணைக்கடலே
காப்பாயே கந்தா!!

அமரர் அவர்கள் இந்தியாவில் படித்துக் கொண்டிருந்த காலப்பகுதியில் 13.05.1976 தினகரனுக்கு எழுதிய கவிதை

**இது தான் இயற்கை**

இதுதான் இயற்கை
வருவது வந்தே சேரும்
போவது போய்த்தான் தீரும்
நினைப்பது நடந்தால் அவன் ஏன்?
அணைப்பதும் அடிப்பதும் அவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிற்கு பின்பு பகலும்
இனிப்பிற்கு பிறகு கசப்பும்
தொடர்ந்தே வருவது வாழ்க்கை
அடடா! இது தான் அன்றோ இயற்கை

கல்லுக்கு ஈரம் இருக்கும்
சொல்லுக்குள் சுவைகள் தரிக்கும்
வில்லுக்கு வீரன் விஜயன்
மல்லுக்கு தீரன் வீமன்

வந்தவை என்றும் வரவில்லை
சென்றவை மீண்டும் செலவில்லை
கூட்டிக் கழித்தால் பந்தம் எங்கே
ஆறடிநிலமே சொந்தம் இங்கே!

இந்த கவிதையை வாசிக்கின்ற போது அவரின் சிறப்பை உணரக் கூடியதாக இருக்கிறது. பிறப்புக்கும் இறப்பிற்கும் இடையிலான வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமில்லை எல்லாம் இயற்கை நியதிப்படியே நடந்து தீரும் என்பதை எம்மையும் உணர வைக்கிறார்.

இப்படிப்பட்ட அமரர் பல சேவைகளையும் செய்தவராவார். "விவேகானந்த சபை" அங்கத்தவராக இருந்து சமயத்திற்கும் தன் பங்களிப்பை வழங்க தவறவில்லை. மாணவர்களுக்கு "சமயம்" பாடத்தையும் கற்பித்ததோடு மட்டுமல்லாமல் இலங்கை பூராக நடக்கும் பரீட்சையில் பங்கு பெறும் மாணவர்களின் விடைத்தாள்களை திருத்துதல், மதிப்பீடு செய்தல் என்பவற்றில் பெரும் பங்கு வகித்திருக்கின்றார். "தன் மதத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்ய மறக்காதவர்.

சாயி சேவையில் ஈடுபாடுடைய இவர் 13.08.2015 அன்று மரணிப்பதற்கு முதல்நாள் வன்னியிலுள்ள ஏழைப்பிள்ளைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்வதற்காக சாயிசங்க தலைவரிடம் பணத்தினை பெருவிருப்போடு அளித்தவர். உதவி செய்வதற்கு தயங்காதவர்.

இவர் 1999ம் ஆண்டு கொழும்பிலிருந்த காலப்பகுதியில் சமாதான நீதவான் (J.P) பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். இதனூடாகவும் பல சேவைகளை முன்னின்று செய்தவர்.

14.08.2015 வாழ்க்கையின் இறுதிப் பக்கத்தில் அண்மித்த நாள். ஓரிரு தினம் சுகவீனத்துடன் காணப்பட்டாலும் பலவீனமற்றவராகவே காணப்பட்டார். தன் அன்பு மனைவி சியாமளாவிடம் "வயிற்றுக்குள் வலிக்கிறது, நெஞ்சினுள் அடைக்கிறது, மூச்சு வித்தியாசமாக வருகிறது" என்று கூறியவர் தன் மரணத்தை அவர்மட்டுமல்ல யாருமே எதிர்பார்க்காதவொன்று அன்று ஆடிஅமாவாசை... விரதத்தை முடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு செல்வோம் என்ற எண்ணத்துடன் இருந்த போது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியும், மூச்சு திணறலும் அவரை பலவீனமாக்கியது.

பகல் 10.00 மணி இருக்கும் போது தனது மருமகள் சித்திராவுடன் தொலைபேசியில் கதைத்து "ஆஸ்பத்திரி போகிறோம், நேராக அங்கே வரவும்" என்றார். அவர் அவர்களுடன் உரையாடிய இறுதி வார்த்தைகள்.

மனைவி சியாமளாவிடம் "மூலிகை குடிநீர்" வேண்டி பருகி ஆஸ்பத்திரிக்கு போகும் தருவாயில் அவர் உடல் கூட்டைவிட்டு பறந்தது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு அமைவாக தனது இறுதிப் பயணம் வரை தன்னாலான சேவைகளை செய்து கடவுளுடன் கலந்து விட்டாலும் அவர் சுவடுகள் எம்மவர் மத்தியில் நினைவுகளாக..... எப்போதும் மனத்திரையில் பதிந்திருக்கும்.

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிறைந்தவருக்கு........

பிறப்பும் இறப்பும் உலக நியதி
என்றாலும்
ஏற்றுக் கொள்ள முடியுமா?
மரணத்தை வென்றவர் யாருமில்லை
உலகில் என்றாலும்
மறுக்கின்ற மனத்திற்கு
ஆறுதலாய் பலர் அருகிருந்து
தேறுதலாய் வார்த்தைகள் பல சொன்னாலும்
மனம் முகாரி இசைக்கிறதே!

01.05.1977 இல்
வாழ்க்கையில் இணைந்த நாள்முதல்
14.08.2015 வரை
வாழ்ந்த அன்பான வாழ்க்கை
"நல்ல கணவராய் எனக்கு நீங்கள்"
இருந்ததை நினைத்து பார்க்காமல்
இருக்க முடியுமா?
இளமை முடிந்தாலும்
முதுமை அடைந்தாலும்
கணவன் மனைவி எனும் பந்தம்
யாராலும் பிரிக்க முடியாத முடிச்சு!

வீணையின் தந்திகள்
அறுந்து போனால்....
இனிய கானம் பிறக்குமா?
முப்பத்தெட்டு வருடங்கள்
"நகமும் சதையுமாய்
வாழ்ந்த வாழ்க்கை
மறந்து போகுமா?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....

அவனியிலே அன்புடன்
நாங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு
அடையாளமாக
"ஒரு சின்னத்தை"
கொடுக்க ஆண்டவன்
தவறிவிட்டான்!
எங்கு சென்றாலும் கூடவே
அழைத்து செல்லும் நீங்கள்
மரணத்தின் போது மட்டும்
தனியாக புலம்பவிட்டு
சென்றுவிட்டீர்கள்!
செய்வதறியாது திகைத்தும் போய்
'மரணத்தை' ஏற்று கொள்ள
திராணியற்றவளாய்......
என் இறுதிநாட்களை எப்படி
கழிக்க போகின்றேன் என்ற "?" யுடன்!
விழி மூடும் நாளினை எண்ணி
நாட்களை நகர்த்துகின்றேன்!

மனைவி
**வ.பிரேமசியாமளா**

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும்
பிறப்பு"

- வள்ளுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சின்ன மாமா

பாசமுடன் பழகிய சின்ன மாமா இன்று இல்லை என்பதை நம்ப மறுக்கிறது என் இதயம். "பட்டணத்தைப் பார்க்கப்போகும் சின்ன மாமா இந்தப் பையனையும் மறந்திடாதே சின்னமாமா" என்ற பாடலை அம்மா சொல்லித் தந்த போது இந்தப் பாடலில் வரும் சின்னமாமா போல் உனக்கும் சின்ன மாமா இருக்கிறார் என்று உங்களைத்தான் சொன்னார். அந்த நாள் ஞாபகத்தை மீட்டிப் பார்க்கிறேன்.

கொழும்பில் வெசாக் பார்க்கக் கூட்டிச் சென்றதும் கெப்பிடடல் கிங்ஸ்லி செல்லமகால் கெயிட்டி திரையரங்குகளில் படம் பார்க்க கூட்டிச் சென்றதும் பசுமையான நினைவுகள்.

1976இல் உங்கள் பதிவுத் திருமணம் கொழும்பு பண்டார நாயக்க மாவத்தையில் மாமியின் இல்லத்தில் நடைபெற்றது. புதிய பாவாடை சட்டை போட்டு படங்களில் முன்னுக்கு நின்றதை நினைத்துப் பார்க்கிறேன் அதன் பிறகு மாமி வீட்டுக்குப் போகும் போது என்னையும் கூட்டிச் செல்வீர்கள். அங்கு நான் உங்கள் மருமகள் என்பதால் ஒரு சிறப்பு விருந்தினர். மாமி எனக்கு லட்டு பயற்றம் பணியாரம் பலகாரங்கள் தந்து சாப்பிட்டது இன்று போல் உள்ளது. காலம் ஓடி விட்டது.

1977 மே முதலாம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை சிவ

சுப்பிரமணியசுவாமி கோவிலில் உங்கள் திருமண விழா. எனக்கோ நல்ல கொண்டாட்டம் . எங்கள் வீட்டில் அலங்காரக் கோலம். ஆசைஐயா பெரிய மாமா சித்தி பாலண்ணை சின்னண்ணை(சிவம்) ஜெயமண்ணை எல்லோரும் வந்து மகிழ்ச்சியுடன் களித்த நிகழ்வு. 38 வருடங்கள் ஓடிவிட்டன. இந்த வருடம் உங்கள் திருமண நாளை கபிலன் செந்திரு சந்தியா மாருதி ஒழுங்கு செய்து கொண்டாடியது நல்லதொரு நிகழ்வு. அந்த மகிழ்வுடன் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து விட்டீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் திருமண நாளில் இருந்து எனது பிறந்த நாளை மாமி மறப்பதில்லை. மே 7 ஆம் திகதி எனக்குப் புதிய உடை அன்பளிப்பு கட்டாயம் கிடைக்கும். உங்களுக்கு கிடைத்த அருமையான மனைவி மாமி. எங்களில் உங்களைப் போலவே பாசத்தைப் பொழிபவர்.

நீங்கள் ஆங்கிலம் சொல்லித் தந்த நேர்த்தியும் உலக விடயங்களைச் சுவைபடக் கூறுவதும் மறக்க முடியாத நிகழ்வுகள். எனது வேலை நியமனக் கடிதம் எடுக்க உங்களுடன் திருகோணமலைக்கு சென்றதையும் எண்ணிப் பார்க்கிறேன்

நான் கனடா வரும் முன் நீங்களும் பெரிய மாமாவும் தொலைபேசியில் என்னுடன் கதைத்தீர்கள். பெரிய மாமா என்னுடன் கதைக்க முடியாமல் அழுது விட்டார். நீங்கள் பிறகு கடிதத்தில் 'அண்ணன் என்னுடன் கதைக்க முடியவில்லை அழுது விட்டார். எல்லா உணர்வுகளையும் எழுத்தில் வடிக்க நான் கம்பன் இல்லை என்று எழுதியிருந்தீர்கள். உண்மை தான் மாமா. உங்களுடன் எங்கள் பாச நினைவுகளை எழுத முடியவில்லை. "இராம இலக்குமணர் போல் அண்ணன் சொல் தட்டாத அருமைத் தம்பி வல்லிபுர அண்ணை"என்று சிவலிங்க மாமா பெரிய மாமாவின் நினைவுமலரில் எழுதியிருந்தார். சகோதர பாசத்திற்கு இலக்கணம் நீங்கள் தான் மாமா.

அன்பு கொண்ட நெஞ்சினராய்
அனைவரையும் ஆதரிக்கும் இதயத்தினராய்
ஆங்கில ஆசானாய்
சமாதான நீதவானாய்
எங்களை ஏற்றமுடன் வாழ வழிகள் பல சொல்லித் தந்த
என் சின்ன மாமா
இறைவனடியில் அமைதி பெற்றிடுங்கள்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பு மருமகள்
**ஆதி தற்பரானந்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத நினைவுகள்........!

Sleep Dwell upon Thine Eyes,
peace In Thy Breast
Would I were sleep and peace
So sweet to rest.
(william shakespeare)

தூக்கம் உன் கண்களை தழுவட்டுமே
அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே - அந்த
தூக்கமும் அமைதியும் நானானால்....
அமைதியுடன் இனிமையாக தூங்குங்கள்
தாத்தா..........

நீர்க் குமிழி போலும் வாழ்க்கை
நிரந்தரமானதா?
இல்லவே இல்லை என்றாலும்
உறங்காத நினைவுகளாக
உள்ளமதில் உங்கள் பரிவுத்துயர் வாட்டுகிறதே!

*14.08.2015*

ஆடி அமாவாசை
நீங்கள் எங்களை விட்டு
மீளாதுயிலுக்கு சென்ற நாள்
அந்த அமாவாசை இருட்டைப்
போலவே - உங்கள்
உறவுகளின் உள்ளங்களிலெல்லாம்
சோகத்தின் இருள்
மண்டிக்கிடக்கின்றதே!

ஒவ்வொருவர் மனங்களிலும்
ஒவ்வொரு கதறல்கள்...
அனைவருமே விரதம் அன்று
துரிதமாய் விரதத்தை முடித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவோம் என்று நினைக்கும் முன்பே
காற்றோடு கலந்து வந்த வார்த்தைகள்
கதிகலங்க வைத்ததுவே!
சமைத்தது பாதி.....
படைத்தது மீதி.....
"சாப்பிடாமல் போகின்றேன் – நீதான்
சாப்பாட்டையும் கொண்டுபோ
என்றாய்...."
இது என் மாமாவின் கதறல்
"எனக்கு தெரியுமோ அப்பா?
எதிர்பாராத மரணம்
இப்பத்தான் கதைத்தேன் அவருடன்"
இரைந்தே கதைத்தறியா மாமியின்
வார்த்தைகளில் தடுமாற்றம்
மனக்குமுறலில் கண்ணீரோட்டம்.
கோடி கொடுத்தும் வாங்கிட முடியா உயிர்
ஓடி வந்தும் அருகிருந்து பார்க்கும் இடையில்
ஆடி அருளும் ஆண்டவன் பாதத்தில் துயில்
கூடி எல்லோரும் அழுதாலும் தீர்ந்திடாது துயர்!!
(பாலசுப்பிரமணியம், சித்திரா)
இப்பத்தான் சித்தப்பாவும் சித்தியும்
(பாஸ்கரன், குமுதினி)
சொன்னார்கள் இன்னுமவர்
பத்துவருடங்கள் இருப்பாரென்று!
எங்கள் (சந்தியா, ஜெயமாருதி)
பட்டமளிப்பு விழா பார்க்காமல்
போவாரோ தாத்தா!
அவர்களின் கண்ணீர் கதறல்
வாய்விட்டு அலறிய சந்தியா
அண்ணாவுக்கு (கபிலன்)
தகவல்
கட்டுப்படுத்த முடியாத கண்ணீர்,
தாங்க முடியாத வலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா....... (செந்திரு)
சந்தியா அழைத்துக் கொண்டே
நுழைகின்றாள் அவள் வீட்டினுள்
தாத்தா...... போய்விட்டார்.
ஏற்க முடியவில்லை ஒருவராலும்
செவ்வாய்கிழமை (11.08.2015)
கொடிகாமம் வந்துவிட்டு
போனாரே
எப்படி இருந்தார் நலத்துடனே, எங்களிருவரையும்
அக்கறையுடன் விசாரித்தாரே?
வாஞ்சையுடன் கதைத்தாரே!
மரணம் என்பது இதுதானா?
(கெங்காதரன், செந்திரு)

இங்கு தான் நிலைமை இப்படி
என்றால்....
வட்டகச்சியிலோ பேரிடி!
தொலைபேசி உரையாடல்கள்
வருகின்றோம் நாங்களும்....
வரமுன்பே காத்திருக்கவில்லை!
தவிக்கவிட்டு சென்றுவிட்டாரா?
கொடிகாமம் வந்த போது
எவ்வளவு கதைகள்,
எவ்வளவு நேரம் எங்களுடன்
(ஜெயாசித்தப்பா, மதிஅன்ரி)
மகிழ்வுடனே கதைத்திருந்தார்
பொறுக்க முடியவில்லை
கண்ணீரை நிறுத்தவும் முடியவில்லை
"சின்னண்ணை
ஒரு வாய் உண்டவர்
மீதம் கொட்டிவிட்டார்"
மதி அன்ரியின் உடைந்த வார்த்தைகள்!
நொறுங்கிய இதயங்களில் வலி,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்களின் ஆசைஜயாவை ஓடி வந்து
பார்க்கும் முன்பே
அகிலத்தை ஆளும் ஆண்டவன் பாதத்தில்
சரணாகதி ஆகிவிட்டார்.
(ஜெயம், சிவம், மதி)

தாத்தா........
நான் மனதிற்குள் கதறுகிறேன்
பாட்டிக்கு எப்படி ஆறுதல் சொல்வேன்,
எனது கணவர் (கபிலன்)
தொலைபேசியில் சொன்ன
வார்த்தைகள் கேட்டு மறுகிப்
போகின்றேன்!
ஓடுகின்றேன் ஆஸ்பத்திரி நோக்கி.....
தாத்தா.....
அவரின் திவ்வியமான விழிகள்
நெற்றியிலே வட்டமான சந்தனப்பொட்டு
அமைதியான கதை
அளவான பேச்சு
தன்னடக்கமான போக்கு,
ஆங்கிலமொழியில் தேர்ச்சி
எனக்கு சந்தேகம் தீர்க்கும் பாங்கு
எல்லாமே போய்ச்சு தாத்தா!
நிழலாடும் உங்கள் முகம்
என்றுமே எந்தன் நினைவில்

குறுக்கெழுத்து போட்டி
எல்லோர் பெயரிலும் அனுப்புவீர்கள்
பரிசில்களும் கிடைக்கும்,
அதன் பெறுமதி இப்போ தான்
புரிகிறது எனக்கு,
உங்கள் பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்றவுடன்
B.A, M.A...... என்று
போட்டு கடிதம் போடுவீர்களாமே
தாத்தா....
என் கணவரின் உள்ளக் குமுறல்!
இனி சந்தியாவும், மாருதியும்
பட்டம் பெறும் போது
B.A , என்றும் M.B.B.S, என்றும்
அனுப்புவதற்கு நீங்கள் இல்லையே
தாத்தா!
நீங்கள் ஜீவகாருண்யம் நிறைந்தவர்,
நீங்கள் வளர்த்த நாய்களும்
அதிகாலை எழுந்தவுடன்
"பணிஸ்" சாப்பிடுவதற்காக
வந்து குவியும் காகங்களும்
ஏக்கத்துடன் உங்களை
தேடுகின்றன!!

உங்களிடம் தான் எத்தனை சிறப்பம்சங்கள்
கற்றுக்கொள்ள எவ்வளவோ
இருக்கின்றது!

என் மீது கூட எவ்வளவு
பிரியம் உங்களுக்கு
Mrs. கபிலன் என்று
அழைப்பீர்களே தாத்தா என்னை
முதன் முதலில் உங்களை தான்
சந்தித்தேன் என் கணவரின்
உறவுகளாக....
இன்று கண்ணீரின் என் விழிகள்!
துடைத்திடத் தோன்றவில்லை
எனக்கு......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Because I could not stop for death*
*He kindly stopped for me*
*The carriage held but just odreslves*
*And Immortatity.*
*- Emily Dickinson*

*Death be not proud, though some have called thee*
*Mighty and dreadful,for, thou dost overthrow,*
*Die not,poor death, nor yet canst thou kill me*
*- Jone Done*


## தேற்றம்

வாழ்க்கை எத்தனை சுமையாய் இருப்பினும்
வாழ்தல் இனியதே
மரணம் எத்தனை இலகுவாய் இருப்பினும்
மரணம் கொடியதே
மலை சரிந்தது போன்றதுன் மரணம்
ஆழ்ந்த அமைதியில்
இடியின் முழக்கமாய்த் திடீரென வந்தது
வாழ்வின் நம்பிக்கை தளர்ந்தது ஒருகணம்
இருத்தலின் அடித்தளம் குலுங்கி அசைந்தது
தூக்கமும் விழிப்பாய் நினைவுச் சுழல்களாய்க்
கரைந்து கழிந்தது
நாட்கள் நகரும் நாங்களும் எமது
ரோக்கிலே தொடர்ந்து
புதியன முயல்வோம் வாழ்க்கை இதுதான்
மரணமும் இதுதான்

நுஃமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் நெகிழ்ந்த நன்றிகள்

எங்கள் குடும்பத்தலைவர் அமரர் செல்லையா
வல்லிபுரம் காலமான போது மந்திகை போதனா
வைத்தியசாலையில் உதவிபுரிந்த உறவினர்களுக்கும்
துயர் பகிர்ந்து இறுதிக்கிரிகைகளில் கலந்து
கொண்ட உறவினர் உற்றார், ஊரவர் நண்பர்கள்,
தொலைபேசி வாயிலாகத் துயர் பகிர்ந்து கொண்ட
யாவருக்கும் இன்றைய வீட்டு (அந்தியேட்டி)க்
கிரியைகளில் கலந்துகொண்ட யாவருக்கும்
நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவசெல்வ வாசம்,
கரவெட்டி கிழக்கு.

இங்ஙனம்
குடும்பத்தினர்

மருதம் பதிப்பகம் – நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

T.P - 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org